APRIL 2025

www.balamandir.org

மலர்-2 இதழ்-1

MALARUM MOTTUKKAL

பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE) செய்திமடல்

மலரும் மொட்டுக்கள்







பாலமந்திர் ஆண்டுவிழா:

பால மந்திரின் **76**ஆவது ஆண்டு விழா **10/03/2025** அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கடந்த ஆண்டு முழுவதும் நடந்த முக்கியமான நிகழ்வுகள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. நீண்டநாள் பணி செய்பவர்களுக்கான விருதுகள் மற்றும் ஆண்டின் சிறந்த பணியாளர் விருதுகள் வழங்கப்பட்டன. குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் இயக்குநர் திரு. ஜானி டாம் வர்கீஸ். ஐ.ஏ.எஸ் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார்.

"பால மந்திரைச் சேர்ந்த குழந்தைகள் வண்ணமயமான நிகழ்ச்சிகளை நடத்தினர்."

ஆரம்பகால குழந்தை கல்வி - கருத்தரங்கு:

பால மந்திர் ஆராய்ச்சி மற்றும் வள மையத்தின் மறைந்த தலைவர் திருமதி.எஸ்.ஆனந்தலட்சுமியின் பங்களிப்பை நினைவுக்கூறும் வகையில் **22/03/2025** அன்று, ஆரம்பகால கல்வியை,குழந்தைகளுக்கு எப்படி பாடல்கள்,குறும்படங்கள் மற்றும் கதைகள் மூலம் சொல்லித்தரலாம் என்ற மைய நோக்கத்துடன் கருத்தரங்கு நடத்தப்பட்டது. ஆரம்பகால குழந்தைப் பருவம் மற்றும் வளர்ச்சிக் குறித்த ஒரு பயனுள்ள உரையாடலாக அமைந்தது. பால மந்திரைச் சேர்ந்த குழந்தைகள் வண்ணமயமான நிகழ்ச்சிகளை நடத்தினர்.





பொம்மலாட்ட நிகழ்ச்சி:





திருவள்ளுவர் மற்றும் திருக்குறள் பற்றிய ஒரு பொம்மலாட்ட நிகழ்ச்சி பால மந்திர் பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இது, தமிழின் ஆகச் சிறந்த புலவரான திருவள்ளுவர் குறித்தும் உலகபொதுமறை குறித்தும் குழந்தைகள் அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்தது.

அறுவடை ஞாயிறு:





பால மந்திரைச் சேர்ந்த குழந்தைகள் சென்னை மீள்திறன் மையத்தின் குழுவுடன் இணைந்து, பாலமந்திர் தோட்டத்தில் காய்கறிகளை அறுவடை செய்வதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். பூமியைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தை குழந்தைகளுக்கு விளக்கினர்.

PDF Scanner ACE Scanner

உங்கள் சமூகப்பணியாளரை அறிந்துக் கொள்வோம் :



- திரு.முத்துகிருஷ்ணன், தனது சமூகப் பணிக் கல்வியைச் சென்னை விவேகானந்தா கல்லூரியில் முடித்தவர். தொடர்ந்து அங்கேயே விடுதிக் காப்பாளராகப் பொறுப்பேற்று பணியாற்றி வந்தார்.
- கடந்த **2024** ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நமது பாலமந்திர் நிறுவனத்தில் திருவண்ணாமலைக்கான சமூகப் பணியாளராக இணைந்து பணியாற்றி வருகிறார்.
- இயல்பாகவே குழந்தைகளிடம் அதிக ஈடுபாடு கொண்ட இவர் தற்போது திருவண்ணாமலையில் **70** குடும்பங்களைச் சேர்ந்த **124** குழந்தைங்களுக்கு கின்ஷிப்கேர் மூலம் உதவிகளை அளிக்கிறார்.

கின்ஷிப் கேர் - Kinship Care

பால மந்திரின் கின்ஷிப் கேர் திட்டம் பல்வேறு மாவட்டங்களில் சுமார் **886** குடும்பங்களைச் சேர்ந்த **1561** குழந்தைகளுக்கு ஆதரவளிக்கிறது

மலரும் மொட்டுகள் உருவானதன் நினைவு:

நாம் இப்போது படித்துக்கொண்டிருக்கும் செய்திமடல், கின்ஷிப்கேர் திட்டத்தின்
பலரின் மூளையிலிருந்து உருவானது. ஒரு சிறு உந்துதலால் துவங்கப்பட்டது இப்போது செய்திமடலாக மாறியுள்ளது.

மலரும் மொட்டுகள் முதல் பதிப்பு கடந்த ஏப்ரல் **2024** இல் மின்னிதழ்**(PDF)** வடிவத்தில் வெளியிடப்பட்டது.
அதன் வரவேற்பைக் கண்டு நாங்கள் வியந்தோம். செய்திமடல் பெற்றோர்க்கு விநியோகிக்கப்பட்டன. அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.
அந்த ஊக்கத்தைப் பெற்று, செய்திமடலை மேம்படுத்த யோசித்தோம். மலரும் மொட்டுகளின் பயணம் தொடங்கி இப்போது ஒரு வருடம் ஆகிறது. நாங்கள் இப்போது செய்திமடலை மின்னிதழ்**(PDF)** மற்றும் வீடியோ வடிவத்தில் வெளியிடுகிறோம். மேலும், இது பால மந்திருக்கும் எங்கள் பயனாளிகளுக்கும் இடையே ஒரு இணைப்புப் பாலமாக உள்ளது.



"தனி நபரால் சிறு முயற்சியாகத் தொடங்கியது இப்போது ஒரு பெரிய குழுவாக வளர்ந்துள்ளது. மேலும், பல வீடுகளைச் சென்றடைந்துள்ளன!"

PDF Scanner ACE Scanner

பெற்றோர்களுக்கான பகுதி:

விடுமுறை நாள்கள் நெருங்கி வருவதால், குழந்தைகள் தங்கள் ஆண்டு விடுமுறைக்காக ஆவலுடன் காத்திருப்பார்கள். அதே நேரத்தில், பெற்றோர்க்கும் குழந்தைகளை சமாளிப்பது சவாலாக இருக்கும். விடுமுறை நேரத்தை குழந்தைகளுக்குப் பயனுள்ளதாகவும் மாற்ற நாம் அவர்களை மற்ற சிறப்பு வகுப்புகளிலோ விடுமுறை முகாம்களிலோ சேர்க்க வேண்டியதில்லை.

குழந்தைகளுக்கு வயதுக்கேற்ப கொடுக்கக்கூடிய எளிய வேலைகளின் பட்டியல் கீழே உள்ளது:





வீட்டில் அவர்களின் வயதுக்கேற்ற சிறிய வேலைகளில் ஈடுபடுத்தினால் போதுமானது. இது அவர்களுக்குப் புதியவற்றைச் சொல்லிக் கொடுக்கும்,அவர்களின் பொறுப்புணர்வை அதிகரிக்கும் மேலும், அவர்களின் தன்நலனை அதிகரிக்கும்.

பால மந்திர் குறித்தும் அதன் சேவைகள் மற்றும் கின்ஷிப்கேர் குறித்தான விரிவான தகவல்களை வழங்கினர்.



வயது 3-5

- அழுக்குத் துணிகளை எடுத்துவைக்கவும் ,
- வீட்டைத் துடைக்கவும்
- வாங்கிய காய்கறிகளை அடுக்கிவைக்கவும்

வயது 6-8

- துணிகளை மடித்து வைக்கவும்
- காய்கறிகளை உரிக்கவும்
- துடைத்தல்
- கழுவப்பட்ட பாத்திரத்தை அடுக்கி வைக்கவும்

9 வயதிற்கு மேல்

- காய்கறிகளை உரிக்கவும்
- வீட்டை பெருக்கவும் மற்றும் துடைக்கவும்
- மளிகைப்பொருள் மற்றும் காய்கறிகளை அடுக்கிவைக்கவும்
- சமயலறையில் உதவவும்
- தட்டு மற்றும் தம்ளர்கள் போன்ற சிறிய பாத்திரங்களைக் கழுவவும்.

PDF Scanner ACE Scanner


ஹேப்பி ரீடிங்(HAPPY READING) :

இன்றைய உலகில் ஆங்கிலம் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. ஆங்கிலத்தில் படிப்பதும், பேசுவதும், எழுதுவதும் மிகவும் அவசியமாகிவிட்டது. எனவே, சரளமாக ஆங்கிலம் படிக்கவும் எழுதவும் பால மந்திர் நிறுவனம், ஞான சாரதா அறக்கட்டளையுடன் இணைந்து, நமது குழந்தைகளின் ஆங்கிலத் திறனை மேம்படுத்த உதவுகிறது. உலகம் முழுவதிலுமிருந்து தன்னார்வலர்கள் குழந்தைகளுடன் ஆன்லைன் வகுப்பில் இணைகிறார்கள். அவர்கள் குழந்தைகளை நேரடியாக வழிநடத்துகிறார்கள். மற்றும் அவர்களின் முழுத் திறனை அடைய இப்படிப்பட்ட வழிநடத்தல்களால் உதவுகின்றன.

4 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படிக்கும் குழந்தைகளும் இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். தற்போது, பல்வேறு இடங்களில் **400** க்கும் மேற்பட்ட குழந்தைகள் ஹேப்பி ரீடிங் திட்டத்தின் மாணவர்களாக உள்ளனர். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்த குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையும் மன உறுதியும் மேம்பட்டுள்ளது.

10 ஆம் வகுப்புத் தேர்வுக்கான தயாரிப்பு அமர்வு:

10 ஆம் வகுப்பு படிக்கும் குழந்தைகளை ஊக்குவிக்கவும் தேர்வுகளை எதிர்கொள்ள அவர்களை தயார்படுத்தவும் சமூகப் பணியாளர்களால் ஒரு அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. கோயம்புத்தூரைச் சேர்ந்த **12** குழந்தைகள் இந்த அமர்வில் பங்கேற்றனர். திருமதி. ராஜலட்சுமி எளிமையாகப் படிப்பதன் நுட்பங்களைப் பற்றி உரையாடினார். கல்வியில் சிறந்து விளங்க விளையாட்டு மற்றும் சரியான நேரத்தில் ஓய்வெடுப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். குழந்தைகளுக்கு இந்த அமர்வு பயனுள்ளதாக அமைந்தது.



இணைய வழிக்கூட்டம் காஞ்சிபுரம்:

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சமூகப் பணியாளர்கள் திரு.பெஞ்சமின் மற்றும் திருமதி. பிரியங்கா ஆகியோர் ஒருங்கிணைப்பில் சமீபத்தில் கின்ஷிப்கேர் திட்டத்தில் சேர்க்கப்பட்ட குடும்பங்களுடனான இணைய வழிக் கூட்டத்தை(**GOOGLE MEET)** ஏற்பாடு செய்திருந்தனர்.

பால மந்திர் குறித்தும் அதன் சேவைகள் மற்றும் கின்ஷிப்கேர் குறித்தான விரிவான தகவல்களை வழங்கினர்.

PDF Scanner ACE Scanner

YOUNG ACHIEVERS



வர்ஷன் (வேலூர்) ஜி.கே. போட்டியில் பரிசு பெற்ற



ரவீனா ஸ்ரீ நாமக்கல் பேச்சுப்போட்டி



அபிநயா காஞ்சிபுரம் ப்ரோபிஸன்சி.



தாரணி. எஸ் - திருவண்ணாமலை - திருக்குறள் போட்டி



எஸ்.பிரியதர்ஷினி (திருவண்ணாமலை) தமிழ் கட்டுரை எழுதுதல்.



எஸ்.வினோதினி (திருவண்ணாமலை) திருக்குறள், தமிழ் பேச்சு, தமிழ் கட்டுரை, தமிழ் கவிதை ஒப்புவித்தல்.



சாய்சரண் (திருவண்ணாமலை) 50 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதலிடம்.



கனிஷ்கர் (திருவள்ளூர்) வகுப்பில் முதல் மாணவிக்கான விருது.



கார்த்தி காஞ்சிபுரம் கராத்தே

PDF Scanner ACE Scanner

YOUNG ACHIEVERS



ரேஷ்மி காஞ்சிபுரம்
ஓட்டப்பந்தயம்.



லிடியா காஞ்சிபுரம் பேன்சி
டிரஸ் காம்பெடிஷன்.



ஜனனி காஞ்சிபுரம்
ப்ரோபிபிஸன்சி



கார்த்திக காஞ்சிபுரம்
கராத்தே



நந்திதா ஸ்ரீ காஞ்சிபுரம்
ஆண்ட்ராய்டு



டிம்பிள் ஹாசினி (திருவள்ளூர்)
வகுப்பில் முதல் மாணவிக்கான
விருது.



அக்ஷயா (வேலூர்) வகுப்பில் முதல்
மாணவிக்கான விருது.



சன்வந்திதா (திருப்பூர்) அபாகஸ்
போட்டியில் முதல் பரிசு.



வர்சன் (வேலூர்) கே.ஜி வகுப்புகளை
முடித்ததற்கான பட்டம் பெற்றார்.

PDF Scanner ACE Scanner

YOUNG ACHIEVERS



ஏ.சித்தார்த் (திருவண்ணாமலை) ஓவியப் போட்டி 3ம் பரிசு.



கிரிநாத் (வேலூர்)ஓவியம் வரைதல் போட்டியில் பரிசு பெற்றார்



தருண் (திருவண்ணாமலை) கட்டுரை எழுதும் போட்டியில் முதலிடம்.



சாஹில் (சென்னை) ஆங்கிலம் கட்டுரைப் போட்டி இரண்டாம் பரிசு



மதுநிஷா & ஸ்ரீநிதி (வேலூர்) திருக்குறள் போட்டி.



பிரகதி (திருவள்ளூர்) கல்வி ஒழுக்கம் மற்றும் திருக்குறள் போட்டியில் முதலிடம்.



வெனிஷா (நாமக்கல்) வகுப்பில் முதல் மாணவிக்கான விருது.



அனன்யா (வேலூர்) ஓவரால் பர்பாமன்ஸ்.

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!

PDF Scanner ACE Scanner